**கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,**
**விருதுநகர் மாவட்டம் (இருப்பு) திருவில்லிபுத்தூர்**

**OS.No: 6/2016** **நாள் 24.11.2025.**

**பிவாசா.1, திரு.அனந்தகிருஷ்ணன்**

**பி.வா.சா.1 மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் வாதி தரப்பில் குறுக்கு விசாரணை–**

1ம் வாதியான என் தகப்பனாருக்கும் 1ம் பிரதிவாதியான என் தாயாருக்கும் இடையில் 09.09.1973ம் ஆண்டு திருமணம் நடைபெற்றது என்றால் சரிதான். நான் பிறந்தது 16.01.1981 ஆகும்.எனக்கு தாவா சொத்துக்கள் சம்மந்தமாக வாங்குவது விற்பது தொடர்பாக எனக்கு வயது 18 இருக்கும் போது தான் விபரம் தெரியும். நான் பிறப்பதற்கு முன்பாக என் அம்மா, அப்பா எப்படி, எங்கு வாழ்ந்தார்கள் என்ற விபரம் என்னை விட என் அம்மாவுக்கு தான் அதிக விபரம் தெரியும் என்று சொன்னால் அது சரிதான். என் தாயாரை நீதிமன்ற வழக்கறிஞர் / ஆணையர் மூலமாக விசாரித்துக்கொள்ள வேண்டி எங்கள் தரப்பில் இடைமனு எண்.5/2025 என்ற மனுவை தாக்கல் செய்திருந்தோம் என்றால் சரிதான். அந்த மனுவில் பாரா 4ல் என் தாயார் சண்முகவள்ளி என்பவர் எரிச்சநத்தம் ஊரில் அவருடைய சகோதரி வீட்டில் வசித்து வருவதாக சொல்லியிருந்தார் என்றால் சரிதான். இந்த வழக்கானதை இவ்வழக்குரை சொத்தை பொறுத்து என் அப்பா தா்ன சுயமாக சம்பாதித்து 1ம் எதிர்வாதி பெயருக்கு கிரையம் வாங்கி அவருக்கு பாத்தியப்பட்ட சொத்து என்று தாக்கல் செய்துள்ளார் ஆனால் என் தாயாரோ , என் தாயாரின் சுய சம்பாத்தியத்தில் அவர் பெயருக்கு கிரையம் வாங்கியதாக சொல்லி எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளார் என்ற விபரம் எனக்கு தெரியும். என் தாயார் தாக்கல் செய்திருந்த அந்த இடைமனு எண்.5/2025ல் இந்த தாவா சொத்தானது யார் வருமானத்தை வைத்து வாங்கப்பட்டது என்ற வகையில் தாவா இருப்பதால் என் தாயாரே முதலில் ஆஜராகி சாட்சியம் அளித்தால் வழக்கு நன்றாக இருக்கும் என்று அந்த மனுவில் சொல்லியுள்ளார் என்றால் அது சரிதான். எரிச்சநத்தம் கிராமம் ஆனது இந்நீதிமன்றத்தில் இருந்து சுமார்20 கி.மீ தொவைில் இருக்கும். அந்த இடைமனு எண்.5/2025 ஆனதை இந்நீதிமன்றத்தால் கடந்த 12.06.2025ம் தேதியில் தள்ளுபடியானது என்றால் சரிதான். அதன் பின்பு என்தாயார் இந்நீதிமன்றத்தில் அவருக்கு முன்பாக என்னை சாட்சியம் அளித்துக்கொள்ள வேண்டி அவர் இடைமனு எண்.6/2025 என்பதை தாக்கல் செய்திருந்தார் என்றால் சரிதான். என் தாயார் தாக்கல் செய்திருந்த இடைமனு எண்.6/2025 ல் ஏற்கனவே இந்நீதிமன்றத்தால இடைமனு எண்.5/2025ல் பிறந்த உத்தரவுக்கு எதிராக சென்னை உயர்நீதிமன்றம் மதுரைக்கிளையில் சீராய்வு மனுவை தாக்கல் செய்யப்போவதாக அதில் என் தாயார் சொல்லியுள்ளா்ர என்றால் சரிதான். ஆனால் இதுநாள் வரையிலும் எங்கள் தரப்பில் சிராய்வு மனு எதையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். இடைமனு எண்.5/2025, மற்றும் 6/2025ல் என் தாயார் நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்க இயலாததற்கு காரணம் அவருக்கு காலில் கட்டி ஏற்பட்டு சிறுநீரக தொற்று நோய் ஏற்பட்டு அவர் படுத்த படுக்கையாக உள்ளார் என்பதாகும். மேற்படி இரண்டு மனுக்களையும் இந்நீதிமன்றத்தால் தாக்கல் செய்த பின்பு என் தாயார் சாத்தூர்

சார்பதிவக அலுவலகத்தில் வைத்து பிராது 3ம் அயிட்ட சொத்தை பொறுத்து எனக்கும், 3, 4 எதிர்வாதிகளுக்கும் தனித்தனியாக தான செட்டில்மெண்ட் ஆவணங்களை எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் சரிதான்.

**(குறுக்குவிசாரணை தொடர்ச்சி வேண்டி இரு தரப்பில் வேண்டுதல் பேரில் ஒத்திவைக்கப்படுகிறது.)**

**சாட்சியின் கையொப்பம்**

**Name of the Interpreter : Not necessary**

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1989 (Central Act 44 of 1989 on the 24th day of November 2025.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு. தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் செய்யப்பட்டது.

கூடுதல் மாவட்ட நீதிபதி,
கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,
ஸ்ரீவில்லிபுத்தூர்.